(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF THE I ADDL.DIST. & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**.208/2017 அ.சா.15

Name : மருத்துவர். செல்வராஜ்
Father's name :
Village :
Taluk :
Caste :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 22-02-2023.

A1 toA3 present One witness summon served and present examined as PW15. EX.P9 marked.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது மதுரை மருத்துவக்கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் துறைத்தலைவராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 27.09.2014 ம் தேதியன்று நான் இதே துறையில் பணியாற்றிய போது நாகமலைப்புதுக்கோட்டை காவல்நிலைய பொறுப்பு ஆய்வாளரான திருமங்கலம் மதுவிலக்கு காவல்ஆய்வாளரின் வேண்டுகோளை பெற்று காவலர் எண்.2108 திரு.அழகர்ராஜா என்பவரால் அடையாளம் காட்டப்பட்ட சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஷாகுல்ஹமீது என்ற ஆண்பிரேத்தை அன்று பிற்பகல் 2.20 மணிக்கு சடலக்கூறாய்பு செய்தேன். பிரேதம் பிரேதவிறைப்புடனும், கை, கால், விரல் நகங்கள் ஊதா நிறத்திலும் காணப்பட்டது.

**இறப்பிற்கு முன்பான காயங்கள்**

1. தலையும், வலதுபக்க முகமும் நசுங்கி உருமாறி இருந்தது. தலைத்தோல் முழுவதும் கன்றிய காயம் காணப்பட்டது. கபாலம் மற்றும் முகஎலும்புகள் பல தரப்பட்ட அளவு வடிவங்களில் உடைந்து காணப்பட்டது. மூளை பல்வேறு அளவு வடிவங்களில் சிதைந்து காணப்பட்டது. மூளை உறைகளில் ஒரு பரந்த இரத்த உறைவு காணப்பட்டது.

2. கழுத்தின் இடதுபக்க முன்பக்கததில் ஒரு சாய்வான குத்துக்காயம் 5 செ.மீ X 1 செ.மீ X அறை ஆழம் வரை காணப்பட்டது. இந்த காயமானது சாய்வாக கீழ்நோக்கியும், உள்நோக்கியும் சென்று அடியில் காணப்பட்ட தசைகள், நரம்புகள், நாளங்களை துளைத்து நுரையீரலின் உறையை 4 செ.மீ X 0.5 செ.மீ அளவில் முழுவதுமாக துளைத்து இடது நுரையீரலின் மேல்பகுதியை 3 செ.மீ X 1 செ.மீ x 1 செ.மீ அளவில் துளைத்து ஒரு முனையாக முடிந்திருந்தது. இடது மார்புஅறையில் 200 மி.லி அளவு இரத்தம் இரத்தக் கட்டிகளுடன் காணப்பட்டது. வலது மார்புஅறை காலியாக இருந்தது.

3. மேலே சொல்லப்பட்ட காயம் 2 க்கு 1 செ.மீ கீழே ஒரு சாய்வான குத்துக்காயம் 5 செ.மீ X 1 செ.மீ X அறை ஆழம் வரை காணப்பட்டது. இந்த காயமானது சாய்வாக கீழ்

நோக்கியும், உள்நோக்கியும் சென்று அடியில் கண்ட தசைகள், நரம்புகள், நாளங்களை துளைத்தும் நுரையீரலின் மேல்உறையை 4 செ.மீ X 0.5 செ.மீ அளவில் முழுவதுமாக துளைத்து இடது நுரையீரலின மேல்பகுதியை 3 செ.மீX 1 செமீ X 1 செ.மீ துளைத்து ஒரு முனையாக முடிந்திருந்தது.

4. நாடியின் வலதுபக்கம் 2 செ.மீக்கு கீழே கழுத்தின் வலதுபக்க மேல்பகுதியில் தசை வழியே 2 செ.மீ X 1 செ.மீ X3 செ.மீ அளவில் ஒரு சாய்வான குத்துக்காயம் காணப்பட்டது.

5. கழுத்தின் வலதுமுன்பகுதியில் தசை வழியே ஒரு சாய்வான குத்துக்காயம் 4 செமீ X 1 செ.மீ X 3 செ.மீ அளவில் காணப்பட்டது.

6. காயம் எண்.5க்கு 2 செ.மீ.க்கு கீழே கழுத்தின் முன்பகுதியில் தசைவழியே ஒரு சாய்வான குத்துக்காயம் 4 செ.மீ X 1 செ.மீ X 3 செ.மீ அளவில் காணப்பட்டது.

7. கழுத்தின் வலதுபக்கம் தசை வழியே ஒரு சாய்வான குத்துக்காயம் 4 செ.மீ X 1 செ.மீ X 2 செ,மீ அளவில் காணப்பட்டது.

8. கழுத்தின் முன்பகுதியில் 3 செ.மீ X 1 செமீ X 2 செ.மீ அளவில் ஒரு சாய்வான குத்துக்காயம் காணப்பட்டது.

9. காயம் எண்.8க்கு 2 செ.மீ க்கு கீழே ஒரு சாய்வான குத்துக்காயம் தசை வழியே 2 செ.மீ X 1 செமீ X 2 செ.மீ அளவில் காணப்பட்டது.

10. கழுத்தின கீழ் முன்பகுதியில் 2 செ.மீ X 1 செமீ X 1 செ.மீ அளவில் தசை வழியே ஒரு சாய்வான குத்துக்காயம் னகாணப்ப்படடது.

11. கழுத்தின் இடது முன்புறத்தில் 4 செ.மீ X 1 செ.மீ X 2 செ.மீ அளவில் தசைவழியே ஒரு சாய்வான குத்துக்காயம் காணப்பட்டது.

12. தலையின் வலது உச்சிப்பகுதியில் ஒரு சாய்வான வெட்டுக்காயம் 3 செ.மீ X 1 செ.மீ X எலும்பு ஆழம் வரை காணப்பட்டது.

13. இடது கீழ் கையின் 3ல்1 பங்கு நடுப்பகுதியில் வெளிப்புறத்தில் ஒரு சாய்வான வெட்டுக்காயம் 6 செ.மீ X 2 செ.மீ அளவில் தசை ஆழம் வரை காணப்பட்டது.

14. இடதுகண் புருவத்தில் இருந்து வலது கன்னம் வரை ஒரு நசுங்கி சிதைந்த காயம் 12 செ.மீ X 2 செ.மீ X எலும்பு ஆழம் வரை காணப்பட்டது.

15. இடது தோள்பட்டையில் 8 செ.மீ X 2 செ.மீ அளவில் ஒரு கன்றிய காயம் காண்பபட்டது

**<u>குறிப்பு</u>**

1. வெட்டுககாயங்களின் ஓரங்கள் சீராக காணப்பட்டது.

2.குத்துகாயங்களின் ஓரங்கள் சீராகவும், இருவிளிம்புகளும் கூர்மையாகவும்

காணப்பட்டது.

**பிற விபரங்கள்**

இரைப்பையில் 200 கிராம் அளவு பாதி செரித்த உணவு காரநெடியுடன் காணப்பட்டது. அதன் சிலேட்டுபடலம் வெளிறி காணப்பட்டது. சிறுகுடலில் 20 மிலி அளவு மரநிற திரவம் கார நெடியுடனும், அதன் சிலேட்டுமா படலம் வெளிறியும் காணப்பட்டது. பிற உள்உறுப்புகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

**கருத்து**

மேற்கண்ட நபர் பலதரப்பட்ட காயங்களினால் ஏற்பட்ட இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியால் பிரேதபரிசோதனைகு முன் சுமார் 18 முதல் 22 மணி நேரத்தில் இறந்திருக்கலாம் என கருத்து வழங்கியுள்ளேன்.

**குறிப்பு**

இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்ட உள்உறுப்புகளில் நச்சுப்பொருட்கள் எதுவும் கண்டறியப்படவில்லை என்பதால் என்னுடைய இறுதிக்கருத்தாக நான் ஏற்கனவே வழங்கிய கருத்தையே மீண்டும் வழங்கினேன். இறந்து போன நபரின் மீது காணப்பட்டுள்ள தலை மற்றும் தோள்பட்டையில் ஏற்பட்ட கன்றிய காயங்கள் உடைகல் போன்ற கற்களால் ஏற்பட வாய்ப்புண்டு. இறந்து போன நபருக்கு ஏற்பட்டுள்ள குத்துக்காயங்கள், வெட்டுக்காயங்கள் கத்தி போன்ற ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புண்டு. நான் வழங்கிய இறுதிக்கருத்துரையுடன் கூடிய உடல்கூறாய்வு அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

எனக்கு கத்திக்கும், சூரிக்கத்திக்கும் வேறுபாடு தெரியும் என்று சொன்னால் சரிதான். பார்த்தால் சொல்ல முடியும். ஆய்வாளர் கத்தியை காண்பித்து என்னிடம் விசாரித்தாரா என்றால் ஆமாம். கத்தியை காண்பித்து விசாரிக்கும் போது தோராயமாக வரைபடம் வரைந்து கொடுப்பார் என்றால் என்னிடம் கொடுக்கப்படவில்லை. புலன்விசாரணை அதிகாரி என்னிடம் கத்தியை காண்பித்து விசாரித்தார். புலன்விசாரணை அதிகாரி எத்தனை முறை என்னை விசாரித்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. நீதித்துறை நடுவருக்கு அசா.ஆ.9 ஐ எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் 11.02.2014 அன்று அனுப்பப்பட்டது. புலன்விசாரணை அதிகாரிக்கும் அசா.ஆ.9 ஆன ஆவணம் அனுப்பப்பட்டது. நான் சொல்லியுள்ள காயம் எண்.15 ஆனது எறும்பு கடித்தாலும், மழுங்கிய ஆயுதத்தால் அடித்தாலும், சாட்டையால் அடித்தாலும் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல. எறும்பு கடித்தால் வராது, மழுங்கிய ஆயுதத்தால் அடித்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இரும்பு கம்பியால் அடித்தால் மேற்கூறிய காயம் ஏற்பட வாய்ப்புள்ளது

என்றால் சரிதான். காயம் எண்.15 ல் கண்டுள்ள காயத்தின் வடிவ அமைப்பு குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். கையால் குத்தும் போதும் கன்றிய காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் குத்தும் வேகத்தை பொறுத்து மாறுபடும். அந்த கன்றிய காயத்தின் வடிவத்தை வைத்து ஆயுதத்தை கணக்கிட முடியும் என்று சொன்னால் சரிதான். கத்தியினுடைய அகலத்தின் அளவு காயத்தினுடைய நீளம் ஆகும் என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள 2, 3 காயங்களின் நீளம் 5 செ.மீ ஆகும், 5, 6, 7, 11 ஆகிய காயங்களின் நீளம் 4 செ.மீ, 4, 9, 10 காயங்களின் நீளம் 2 செ.மீ ஆகும், 8 வது காயத்தின் நீளம் 3 செ.மீ என்றால் சரிதான். காயத்தினுடைய நீளங்கள் வேறாக இருப்பதால் ஒன்றுக்கும் மேற்படி கத்திகள் பயன்படுத்த வாய்ப்புண்டு. கன்றிய காயத்தை அறுத்துப் பார்த்து ஆய்வு செய்தால் நீளம், அகலத்தோடு ஆழத்தையும் குறிப்பிட முடியும் என்றால் சரிதான். கன்றிய காயங்களுக்கு ஆழம் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்களுக்கும், இறப்பிற்கு பின் ஏற்பட்ட காயங்களுக்கும் வேறுபாடு இருக்கும் என்று சொன்னால் சரிதான். கன்றிய காயங்களை அறுத்துப் பார்த்து இரத்தம் உறைந்திருந்தால் தான் கன்றிய காயம் என்றால் கன்றிய காயத்தின் ஆழத்தில் இரத்தம் உறைந்திருந்தால் இறப்பிற்கு முன்பான காயம் என்று சொல்ல முடியும். காயம் எண்.15 ஆனது இறப்பிற்கு முன்பு ஏற்பட்டதாகும். இறந்து மூன்று மணி நேரத்திற்குள் கனமான மழுங்கிய ஆயுதத்தை கொண்டு தாக்கினால் கன்றிய காயம் ஏற்படலாம் என்றால் குறிப்பாக மூன்று மணி நேரத்திற்குள்ளாக ஏற்பட்டதாக கூற முடியாது. இறந்தவரின் உடல் 48 மணி நேரத்திற்கு பின்பு அழுக வாய்ப்புண்டு என்று சொன்னால் உடலின் தட்பவெப்ப நிலையைப் பொறுத்து மாறுபடும். நான் பார்த்த பிரேதப்பரிசோதனை அறிக்கையில் உள்ள பிரேதமானது அழுகிய நிலையில் இல்லை. ஆய்வாளர் பிரேதத்தினை ஆய்வு செய்வதை குறித்து காயத்தின்தன்மையை குறித்து குறிப்பிட்டு எழுதியிருந்தார் என்றால் சரிதான். ஒரு குத்துக்காயம், ஒரு வெட்டுக்காயம், ஒரு முகம் சிதைந்த காயம், இடது முன்கையில் கீறிய காயம் காணப்பட்டதாக ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். நான் சொன்ன குத்துக்காயம், வெட்டுக்காயங்களில் இருந்து இரத்தம் பீறிட்டு அடிப்பதற்கு வாய்ப்புண்டு. நான் சொன்ன காயங்களில் இரத்தக்கசிவு இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். கன்றிய காயத்தினுடைய நிறத்தை வைத்து அது ஏற்பட்ட காலத்தை குறித்து தோராயமாக சொல்லலாம். அ.சா.ஆ.9 ஆவணத்தை 27.09.2014 ல் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். 27.09.2014 ல் விஸ்ரா அறிக்கையை நான் பெறவில்லை. இறப்பு நேரம் குறித்து பிரேத விறைப்புத்தன்மையை மட்டும் வைத்து இறப்பு நேரத்தை குறித்தேன் என்றால் சரிதான். பிரேதத்தினுடைய உஷ்ணம், நிறமாற்றம் ஆகியவற்றை வைத்தும், பிரேத விறைப்புத்தன்மையை வைத்தும் இறப்பு நேரத்தை குறிப்பிட முடியும் என்று சொன்னால்

சரிதான். நான் சொன்ன 10 மணி நேரத்திற்கு முன்பு இறந்தவருக்கு இறப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கலாம், அல்லது இல்லாமலும் இருக்கலாம். ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது பிரேதபரிசோதனையை அறிக்கையை வைத்து வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. என்னை இந்த வழக்கு சம்பந்தமாக புலன்விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை என்றும், ஆய்வாளர் பதிவு செய்த வாக்குமூலத்தில் இருந்த நேரத்தை வைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

ஒருவருக்கு ஏற்படும் காயத்தில் ஒரே ஆயுதத்தால் குத்தும் வேகம் மற்றும் அழுத்தத்தை பொறுத்தும், குத்தும் இடத்தை பொறுத்தும் மாறுபட வாய்ப்புண்டு என்று சொன்னால் சரிதான். கன்றிய காயத்தை பொறுத்து கல்லை வைத்து தாக்கப்படும் போது தாக்கப்படும் நபரின் மீது அந்த கல்லின் பாகம் படும் விதத்தை பொறுத்து காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

ஒரே கல்லில் பலமுறை தாக்கப்படும் போது ஒன்றுக்கு மேற்பட்ட சிதைந்த காயமும், கன்றிய காயங்களும் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். வெளிப்புறக் காயங்களில் ஒரு கத்தியால் குத்தும் போது அந்த கத்தியனுடைய அகலத்தை விட நீளம் குறைவாக உள்ள வாய்ப்புள்ளது என்று சொன்னால் பொதுவாக இருக்கலாம். வெளிப்புறக் காயங்களில் ஒரு கத்தியால் குத்தும் போது அந்த கத்தியனுடைய அகலத்தை விட நீளம் குறைவாக உள்ள வாய்ப்புள்ளது என்பது வழக்கிற்காக எப்போதுமே ஏற்பட வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.